தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 7-3-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் சர்வ தேச பெண்கள் தின விழா

தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைகழக நாட்டு நலப்பணித் திட்டத்தின் சார்பில் 7-3-2015 இன்று காலை 10.00 மணியளவில் பல்கலைக்கழக அண்ணா அரங்கில் நடைபெற்றது. இவ்விழாவில் 300க்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்து கொண்டனர்.

இந்த விழாவில் சிறப்புரையாற்றிய கவிஞர். சத்தி ஜோதி தமிழ் இலக்கிய சங்ககால இலக்கியங்களில் இடம் பெற்ற கவிதைகளி எழுதிய தமிழ் கவிஞர்கள் என்ன ஆனார்கள் அவர்களுடைய அடையாளங்கள் போற்றதக்கவை. ஐரோப்பாவில் எட்டுமணி நேர வேலை, ஒட்டுரிமை, உலக சமாதானம் ஆகிய மூன்று நோக்கங்களை அடிப்படையாக கொண்டு உலக பெண்கள் தினம் கொண்டாடப்படுகின்றது. பெண்கள் பொட்டுக்கட்டும் வழக்கம் தமிழகத்தில் நிலவியது. இதனை ஒழிக்க குரல் கொடுத்த தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியை போன்ற தியாக மனப்பான்மை கொண்ட பெண்களால் தான் தமிழ்ச்சமூகத்தில் பெண்விடுதலை சாத்தியமாகியுள்ளது. உலகின் பல நாடுகளில் பெண்களுக்கான வாக்குரிமை வழங்கப்பட்டாலும் சவுதி போன்ற சாடுகளிலும் வாக்குதிடை வழங்கப்படாத சூழல் நிலவுகின்றது. மேலும் பெண்களை போகப் பொருளாக பார்கும் நுகர்வு கலாச்சாரம் இன்னும் தொடர்கிறது. இந்நிலை மாற வேண்டும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் இரா. ராமசாமி அவர்கள் தனது வாழ்த்துரையில் இன்றைய அறிவியல் மாணவிகள் அம்மாக்கள் சாணிமெழுகும் காரணத்டித அறிய வேண்டும். பெண்கள் தங்களது உடையின் ஒரு பகுதியான முந்தானையை பொருள் சுமக்கும் சும்மாடாக பயன்படுத்தும் நுட்பம் தமிழ்பெண்களுக்கே உரியது. மாணாக்கியர்கள் அறிவியல் துறையில் தங்களது தனித்திறமைகளை வெளிப்படுத்தவேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

நில மீதான இலக்கத்தின் நிறுவுனர் பத்மஸ்ரீகிருஷ்ணம்மாள் ஜெந்நாதன் அவர்கள் தன்னுடைய சிறப்புரையில் பெண்கள் ஆண்கள் என்ற பாகுபாடு நீங்க வேண்டும். ஆத்டநேயம் பெருகவேண்டும் கீழ வெண்மணி கிராமத்தில் 1969 ஆம் ஆண்டு நிலவுடைமையர்களால் பாதிக்கப்பட்ட கூலிஉயர்வு கேட்ட பெண்களும் குழந்தைகளும் பூட்டியகுடிசையில் கொளுத்தப்பட்ட நிகழ்வு என்னை தஞ்சை மாவட்டம் நோக்கி ஈர்த்து. காந்திகிராமப் பல்கலைக்கழகத்தில் இருந்த நான் அன்று முதல் பாதிக்கப்பட்ட பெண்களுக்காக போராடினேன், இதன் விளைவாக இன்று பல ஆயிரக்கணக்கான மக்கள் நிலம் பெற்றுள்ளனர். தங்களுடைய நிலத்தில் உழைத்த மக்களுக்கு கூலி கொடுக்கும்போது சாதிவெறி பிடித்த நில உரிமையாளர்கள் தீண்டாமை காரணமாக கூலியை கையில் கொடுக்காமல் தூக்கி வீசுவர். இந்நிலை இன்று மாறியுள்ளது. கொடுமை செய்தவர்களிடம் இன்று காந்தி வழியில் உருவாக்கியுள்ளோம். இதற்கு காரணம் காந்தியும். வடலூர் வள்ளலாரின் சிந்தனைகளும் தான் என்று கூறினார்.

மேலும் பெண்களை பெண்களே கொடுமைப்படுத்தும் நிகழ்வுகளும் தொடர்கின்றன. பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் தொடர்கின்றன. இவைகளுக்கு எதிரான போராடும் ஆன்மபலத்தை பெற வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

இந்த விழாவில் சர்வதேச பெண்கள் தின விழா சிறப்பு போட்டிகளில் பங்கு பெற்ற மாணவ மாணவியர்களும் பரிசுகள் வழங்கப்பட்டன.

பல்கலைக்கழக தொலைதூர கல்வி இயக்குநர் முனைவர் .பி. சாந்தி, வங்கி மேலாளர் அன்னப்பூரணி கணேஷ்குமார், டாக்டர் அருள்மொழி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இந்த விழாவிற்கான பணிகளை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதன்மையர் முனைவர். ச. மகிமைராஜா தலைமையில் நாட்டுநலப்பணித்திட்ட அலுவலர்கள் முனைவர்.ந .சக்திவேல், முனைவர். ஜி.குரு, முனைவர். இரா.பவேந்தன், முனைவர்.ஆ தங்க ஹேமாவதி, முனைவர் க. ஹேமாபிரபா ஆகியோர் மேற்கொண்டனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்